செ.வெ.எண்: 57 நாள்: 26.01.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற குடியரசுதின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, 31 பயனாளிகளுக்கு ரூ.12,69,836 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.**

புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில் 69-வது குடியரசுதின விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2018) தேசியக்கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். மேலும் இவ்விழாவில் சமாதானப்புறா மற்றும் வண்ண பலூன்களை பறக்க விட்டார்.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு கதராடை போர்த்தி சிறப்பித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் காவல்துறை, வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கருவூலத்துறை, சுகாதாரத்துறை, தொழிலாளர் நலத்துறை, வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, நில அளவை பதிவேடுகள் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்துறை, பள்ளிக் கல்வித்துறை உள்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 274 அலுவலர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு வருடாந்திர பராமரிப்பு மானியமாக ரூ.50,000 க்கான காசோலைகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 5 நபர்களுக்கு ரூ.23,250 மதிப்பிலான விலையில்லா சலவைப்பெட்டிகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம் (பயிறு), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத்திட்டம், பண்ணை வள மற்றும் சமூக வள மேலாண்மை ஆகிய திட்டங்களின் கீழ் 15 நபர்களுக்கு ரூ.4,80,056 மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் என்.எ.டி.பி திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.55,487 மதிப்பிலான நலத்திட்ட உதவியினையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் என்.எ.டி.பி திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.10,150 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தாட்கோ திட்டத்துறையின் சார்பில் ஒரு பயனாளிக்கு கிராமிய இசை கருவிகள் வாங்க ரூ.1,52,400 மானியமும், சுமை வாகனம் வாங்குவதற்காக 2 பயனாளிகளுக்கு ரூ.3,05,532 மானியமும், பயணிகள் வாகனம் வாங்குவதற்கு 1 பயனாளிக்கு ரூ.1,72,961 மானியமும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.20,000 மதிப்பிலான மேக்னிபயர் கருவிகளையும் சேர்த்து கூடுதல் மொத்தம் 31 பயனாளிகளுக்கு ரூ.12,69,836 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

குடியரசு தின விழாவில் புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப்பள்ளி, அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கந்தர்வகோட்டை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பெருங்களூர் அரசு மேல்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி, திருஇருதய மகளிர் மேல்நிலைப்பள்ளி, அறந்தாங்கி உமையாள் ஆச்சி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய 8 பள்ளிகளைச் சார்ந்த 1,118 மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பெருங்களூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் பிரமிடு கலைநிகழ்ச்சியானது முதல் பரிசை பெற்றது. அறந்தாங்கி உமையாள் ஆச்சி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்களின் யோகாசன நிகழ்ச்சியானது இரண்டாம் பரிசு பெற்றது. அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவியர்களின் தமிழே ஒரு பூங்குயில் என்ற கலைநிகழ்ச்சியானது மூன்றாம் பரிசு பெற்றது. மற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காவல் கண்காணிப்பாளர் திரு.ச.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்

திரு.எம்.சந்தோஷ்குமார், புதுக்கோட்டை சார் ஆட்சியர் செல்வி.கெ.எம்.சரயு,இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.பெ.வே.சரவணன் (அறந்தாங்கி), திரு.சே.ஹா.சேக்முகையதீன் (இலுப்பூர்), மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.க.பஞ்சவர்ணம், உதவி ஆணையர்(கலால்) திருமதி.ஆர்.ஜெயபாரதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், வட்டாட்சியர் திரு.தமிழ்மணி மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள், செய்தியாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**